## தொன்மையான கிறித்தவ தேவாலயங்கள் – இஸ்லாமியப் பள்ளிவாசல்கள் – தர்காக்கள் புனரமைத்தல் – பழுதுபார்த்தல் – கல்லறைத் தோட்டத்திற்கு சுற்றுச் சுவர் கட்டும் பணிகள்!

# தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் - ரூ.3.65 கோடி கடன் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – காசோலைகள் வழங்கினார்!



**சென்னை, டிச. 16 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 13.12.2024 அன்று தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான கிறித்தவ தேவாலயங்கள், இஸ்லாமிய பள்ளிவாசல்கள், தர்காக்களை புனரமைத்தல், பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ள அரசு நிதி உதவி அளித்தல் மற்றும் கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டம் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்களுக்கு புதிதாகச் சுற்றுச்சுவர், பாதை அமைத்தல், புனரமைத்தல் பணிகளை மேற்கொள்ள அரசு நிதி உதவி வழங்கும் திட்டங்களின் கீழ் 3 கோடியே 61 இலட்சத்து 82 ஆயிரத்து 208 ரூபாய்க்கான காசோலைகளை தேவாலயங்கள் மற்றும் தர்காக்களின் நிர்வாகிகளிடமும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் மூலம் 2 பயனாளிகளுக்கு தனிநபர் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 3.80 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:-

**தொன்மையான கிறித்தவ தேவாலயங்களுக்கு நிதியுதவி!**

தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான கிறித்தவ தேவாலயங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், சிவகங்கை மாவட்டம், இடைக்காட்டூரில் செயல்பட்டு வரும் தூய இருதய ஆண்டவர் திருத்தலத்தினை புனரமைக்க 1.55 கோடி ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டு, அதில் முதல் தவணைத் தொகையாக (50%) 77 இலட்சத்து 60 ஆயிரத்து 8 ரூபாய்க்கான காசோலையை அருட்தந்தை இம்மானுவேல் தாசன் அவர்களிடமும்;

திருச்சி மாவட்டம், லால்குடியில் செயல்பட்டு வரும் தூய இருதய ஆண்டவர் தேவாலயம் மற்றும் சென்னை மாவட்டம், அயனாவரத்தில் செயல்பட்டு வரும் நல்மேய்ப்பர் லூத்தரன் திருச்சபை ஆகிய இரு தேவாலயங்களை புனரமைக்க ஒரு தேவாலயத்திற்கு தலா 20 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 40 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டு, முதல் தவணைத் தொகையாக (75%) ஒரு தேவாலயத்திற்கு தலா 15 இலட்சம் வீதம் 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை அருட்தந்தை அடைக்கலராஜ் மற்றும் போதகர் ஸ்டான்லி ஜோசப் ஆகியோர்களிடமும்;

**என மொத்தம் 1 கோடியே 7 இலட்சத்து 60 ஆயிரத்து 8 ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

இதுவரை இத்திட்டத்தின் கீழ், 7 தேவாலயங்களுக்கு 12.90 கோடி ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டு, முதல் தவணைத் தொகையாக (50%) 6.45 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 35 கிறித்துவ தேவாலயங்களுக்கு புனரமைப்புப் பணிகளுக்காக 1.22 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**தொன்மையான பள்ளி வாசல்கள், தர்காக்களுக்கு நிதி உதவி!**

தொன்மையான 6 தர்காக்களில் தேவையின் அடிப்படையில் தங்கும் இடம், சீரந்து நிறுத்தும் இடம், கழிப்பிடம் மற்றும் குளியல் அறைகள் போன்ற வசதிகள் ஏற்படுத்த 5 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை, ஹஸ்ரத் ஷேக் தாவூத் காமில் வலியுல்லாஹ் தர்காவிற்கு 83 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணைத் தொகையாக (70%) 58 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை ஜனாப் எஸ்.எஸ். பாக்கர் அலி அவர்களிடமும்;

கடலூர் மாவட்டம், பண்ருட்டி, ஹஸ்ரத் நூர் முஹம்மது ஷா அவுலியா தர்காவிற்கு, 83 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணைத் தொகையாக (70%) 58 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை ஜனாப் அபுகலாம் ஆசாத் அவர்களிடமும்;

காஞ்சிபுரம் மாவட்டம், ஹஸ்ரத் ஹமீது அவுலியா தர்காவிற்கு, 80 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணைத் தொகையாக (70%) 56 இலட்சத்து 4 ஆயிரத்து 200 ரூபாய்க்கான காசோலையை ஜனாப் முகம்மது இம்தியாஸ் அவர்களிடமும்;

கடலூர், பரங்கிப்பேட்டை, ஹஸ்ரத் உக்காஷா தர்கா, தர்காவிற்கு 83 லட்சத்து 91 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணைத் தொகையாக 58 இலட்சத்து 73 ஆயிரத்து 700 ரூபாய்க்கான காசோலையை ஜனாப் முகம்மது பஷீர் அவர்களிடமும்;

**என மொத்தம் 2 கோடியே 30 இலட்சத்து 97 ஆயிரத்து 200 ரூபாய்க்கான காசோலைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

2021-2022 ஆம் ஆண்டு 77 வக்ஃப் நிறுவனங்களுக்கு 6 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டில் 134 வக்ஃப் நிறுவனங்களின் புனரமைத்தல் மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்காக 10 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. 2024-2025ஆம் ஆண்டில் 100 வக்ஃப் நிறுவனங்களின் புனரமைத்தல் மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கல்லறைத்தோட்டம் - கபர்ஸ்தான்களுக்கு நிதி உதவி!**

கல்லறைத்தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், சென்னை மாவட்டம், TELC அடைக்கல நாதர் லூத்தரன் திருச்சபையின் கட்டுப்பாட்டின் கீழ் புரசைவாக்கத்தில் அமைந்துள்ள கல்லறைத் தோட்டத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்காக 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணைத் தொகையாக (75%) 23 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், போதகர் மற்றும் குழு தலைவர் டாக்டர் ஜெ.ஜி. ஜேகோப் சுந்தர் சிங் மற்றும் கல்லறைத் தோட்ட பொறுப்பாளர் பி.ஜெ.பி. கமலராஜன் ஆகியோரிடம் வழங்கினார்.

இத்திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டில் 1 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 கபர்ஸ்தான்களில் பணிகள் நடைபெற்று வருகிறது. 2024-25 ஆம் ஆண்டில் 1 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, சென்னை, கடலூர், விழுப்புரம் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள 2 கபர்ஸ்தான்கள் மற்றும் 2 கல்லறைத் தோட்டங்களுக்கு பணிகள் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் கடன் வழங்குதல்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசால் 1999-ஆம் ஆண்டு இந்திய கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள் மற்றும் ஜெயின் ஆகியோர் நலனுக்காக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டது. இதன்மூலம் சிறுபான்மையினருக்கு சிறுவணிகம், வியாபாரம் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கி வருகிறது. சிறுபான்மையின மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக இக்கழகம் தனிநபர் காலக்கடன், கைவினை கலைஞர்களுக்கான விரசாத்கடன், சிறு கடன், கல்விக்கடன் போன்ற கடனுதவிகளை வழங்கி வருகிறது.

2024-2025 ஆம் ஆண்டில் இக்கழகத்தின் மூலம், ரூ.75.00 கோடிக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில், இக்கழகத்தின் மூலம், சுயதொழில் செய்ய தனிநபர் கடனாக 2 பயனாளிகளுக்கு 3.80 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ்கள் பெற்ற சிறுபான்மையினர் கல்வி நிறுவன நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்தல்**

சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கு, சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் தொடர்புடைய துறைகளால் வழங்கப்பட்டு வந்த நிலையில், சான்றிதழ் பெறுவதை எளிதாக்கும் வகையிலும், துரிதமாக வழங்கவும், 2023 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ், தலைமைச் செயலாளர் தலைமையில் அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவின் (Empowered Committee) ஒப்புதல் பெற்று, வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை இக்குழுவால் 6 முறை கூட்டங்கள் நடத்தப் பெற்று 159 கல்வி நிறுவனங்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அதில் 103 கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் கல்வி நிறுவன அந்தஸ்து சான்றிழ்கள் பெற்ற நிறுவனங்களின் சார்பில் அதன் நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கே. நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர், மரு. தாரேஸ் அஹமத், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கூடுதல் செயலாளர் முனைவர் சீ.சுரேஷ் குமார், சிறுபான்மையினர் நல இயக்குநர் திருமதி. மு.ஆசியா மரியம், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் ஜோ.அருண், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் சி.பெர்னான்டஸ் ரத்தின ராஜா, கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவர் திருமதி விஜிலா சத்தியானந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## விழுப்புரம் மாவட்டம் – வீடூர் அணையில்

# 8000 கன அடி தண்ணீர் திறப்பு! பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்!

## வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வேண்டுகோள்!

விழுப்புரம், டிச.16–

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பலத்த மழை பொழிந்தது. விழுப்புரம் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதியில் அதிகபட்சமாக 10 சென்டி மீட்டர் மழையும் திண்டிவனம் பகுதியில் 7 சென்டிமீட்டர் மழையும் பொழிந்தது. இதனால் திண்டிவனம் ஒட்டியுள்ள வீடூர் அணையில் நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. தற்போது வினாடிக்கு 2000 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக தற்போது வினாடிக்கு 8000 கன அடி தண்ணீர் வீடூர் அணையில் இருந்து வெளியேற்றப்படுகிறது. இதனை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி நேரில் சென்று பார்வையிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் சி .பழனி உள்ளிட்ட அரசுத்துறை அதிகாரிகளுடன் ஆலோசித்தார்.

பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் முனைவர் க.பொன்முடி, வீடூர் அணை முழு கொள்ளளவை எட்டி உள்ளதால் 9 கண் வழியாக வினாடிக்கு 8000 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. வீடூர் அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் புதுச்சேரி மாநிலம் வழியாக கடலில் கலக்கும். எனவே வீடூர் அணைக்கரை ஓரம் உள்ள விழுப் புரம் மாவட்டம் மற்றும் புதுச்சேரி மாநிலம் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. எனவே மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.



பின்னர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அங்குள்ள பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் அவர்களுக்கு மதிய உணவினை அமைச்சர் முனைவர் க. பொன்முடி வழங்கினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் ம.ஜெயச்சந்திரன், விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் ப.சேகர், தலைமை ஸதீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.மாசிலாமணி, சேதுநாதன்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.கே.பி.ரமேஷ், முன்னாள் நகரச் செயலாளர் கபிலன், ஒன்றியச் செயலாளர்கள் செழியன், ராஜாராமன், இளம்வழுதி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் நன்னிலம் ஒன்றியம் முடிகொண்டானில் உள்ள முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. கொரடாச்சேரி பேரூர்ச் செயலாளர் பூண்டி கே.கலைவேந்தன் பங்கேற்று உணவுகளை பரிமாறினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எஸ்.குமார், துணை அமைப்பாளர்கள் சி.கே.எஸ். எழிலரசன், தாகிர் அலி, கல்யாணசுந்தரம், பேரூர்ச் செயலாளர் சிவ.தியாகு, நகரச் செயலாளர் பக்கிரிசாமி, நன்னிலம் நகர்மன்றத் தலைவர் ராஜா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சி அய்யனார்குளம் தோப்பு பகுதியில் மழை, வெள்ளம் சூழ்ந்த பகுதியை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் நேரில் பார்வையிட்டார். செம்பனார்கோயில் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் அமிர்த.விஜயக்குமார், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரி குமரவேல், செம்பனார்கோயில் ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் பாஸ்கர், மாவட்டப் பிரதிநிதி சடகோபன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனுள்ளனர்.